பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

03 07 2025 **THURSDAY** **7.15 PM**

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மாலை தமது கானா பயணத்தை முடித்துக்கொண்டு **Trinidad – Tobago** புறப்பட்டு சென்றார்.

2. ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பத்து பாதுகாப்பு தளவாட கொள்முதல் திட்டங்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையிலான குழு அனுமதி அளித்துள்ளது.

3. தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில், மேற்கத்திய நாடுகளின் ஒத்துழைப்பும் தேவை என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. 38-ஆவது அமர்நாத் யாத்திரை 12 ஆயிரம் யாத்ரிகர்களுடன் இன்று தொடங்கியது.

5. சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே - சீனாவின் **Zheng** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மாலை தமது கானா பயணத்தை முடித்துக்கொண்டு **Trinidad – Tobago** புறப்பட்டு சென்றார்.

விமான நிலையத்தில் புறப்படுவதற்குமுன், செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர், போர்ட் ஆப் ஸ்பெயினில் நடைபெறும் மக்கள் உடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் தாம் பங்கேற்க உள்ளதை ஆவலோடு எதிர்நோக்கி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாளை **Trinidad – Tobago** நாடாளுமன்றத்தில் உரையாற்ற உள்ளதையும் குறிப்பிட்டுள்ள பிரதமர், அந்நாட்டுடன் மிக நெருங்கிய நட்புறவை வளர்த்துக்கொள்ள இந்தியா விரும்புவதாக கூறினார்.

**Trinidad – Tobago** -வுடன் இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரத்தை பகிர்ந்துகொள்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

முன்னதாக, கானாவில் அந்நாட்டு நாடாளுமன்ற அவையில் உரையாற்றிய பிரதமர், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியின் பயணம் உலகளாவிய வளர்ச்சியின் தூண்டுகோலாக அமைந்துள்ளது என்று கூறினார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயகமாக விளங்கும் இந்தியாவில், ஜனநாயக கட்டமைப்பு மிகவும் வலுவான நிலையில் உள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவின் நாடாளுமன்றம் மிக வலிமையானது என்று குறிப்பிட்ட பிரதமர், நாடாளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு அளித்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெறும் விவாதங்கள் ஜனநாயகத்தின் முத்திரையாக உள்ளது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

அனைவரின் முயற்சியில், அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்துடன் இந்திய ஜனநாயகம் முன்னேற்றப்பாதையில் பீடுநடை போடுகிறது என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

**<<<<<>>>>>**

ஒரு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான பத்து பாதுகாப்பு தளவாட கொள்முதல் திட்டங்களுக்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையிலான குழு அனுமதி அளித்துள்ளது.

ஆயுதம் ஏந்திய மீட்பு வாகனங்கள், மின்னணு தாக்குதல் கட்டமைப்பு முப்படைகள் இணைந்த போர் நிர்வாக கட்டமைப்பு, ஏவுகணைகள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்காக இந்த தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், உள்நாட்டிலேயே ராணுவ தளவாடங்களை கொள்முதல் செய்ய இந்த தொகை பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தளவாட கொள்முதல் நாட்டின் முப்படைகளின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<>>>>>**

தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டுவர அனைத்து உலக நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பயணம் மேற்கொண்டுள்ள திரு ஜெய்சங்கர், வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தீவிரவாதம் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டை ஒட்டுமொத்த உலகின் நலன்கருதி மேற்கத்திய நாடுகளும் ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

ஒரு சில நாடுகள் தீவிரவாதத்தை ஆதரிப்பதால், மற்ற சில நாடுகள் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிப்புக்கு உள்ளாவதாக அவர் கூறினார்.

இந்திய மண்ணில் மட்டுமல்லாது உலகின் வேறு எந்த பகுதிகளிலும் தீவிரவாத தாக்குதல்கள் நடைபெறுவதை தடுக்க வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெளிவுபடுத்தினார்.

<<<<<>>>>>

38-ஆவது அமர்நாத் யாத்திரை இன்று தொடங்கியது.

தெற்கு காஷ்மீரில் உள்ள பஹல்காம் முகாமிலிருந்து மூவாயிரத்திற்கும் மேற்பட்ட யாத்ரிகர்களும், பல்தால் முகாமிலிருந்து ஒன்பதாயிரம் யாத்ரிகர்களும் யாத்திரையை தொடங்கினர்.

இமயமலையில் 12 ஆயிரத்து 756 அடி உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் கோவிலில் உருவாகும் பனி லிங்கத்தை தரிசிப்பதற்காக யாத்ரிகர்கள் பக்தி சிரத்தையோடு பயணித்து வருகின்றனர்.

<<<<<>>>>>

சர்வதேச பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி, நாடு முழுவதும் ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

தமிழகத்தின் திருவாரூரில் தன்னார்வ அமைப்பை சேர்ந்த இளைஞர்கள் சாலைகளில் கிடந்த பிளாஸ்டிக் பைகளை அகற்றியதுடன், நீர்நிலைகளில் மண்ணோடு கலந்துள்ள பிளாஸ்டிக் பொருட்களையும் அகற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் விருதுநகர் பட்டாசு ஆலை வெடிவிபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் கோரி போராடியவர்கள் மீது காவல்துறையினர் கடுமையான அடக்குமுறையை மேற்கொள்வதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பட்டாசு ஆலைகளில் நடக்கும் விபத்துகளை தடுக்க மாநிலத்தில் ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டியுள்ளார்.

காவல்துறையினர் போராட்டம் நடத்தும் அப்பாவி பொதுமக்கள் மீது அடக்குமுறையை மேற்கொள்வதை மாநில அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள குறிஞ்சி நகரில் நடைபெற்ற பழங்குடியினருக்கான மனுநீதி முகாம் பெரிதும் பயனளிப்பதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறையின்கீழ் தமிழகத்தின் தஞ்சையில் செயல்படும் தேசிய உணவு தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை நிறுவனம் உணவு சார்ந்த தொழில் முனைவோரை உருவாக்கி வருகிறது.

இந்த நிறுவனத்தில் பெற்ற பயிற்சியின்மூலம், தற்போது சுய தொழில் தொடங்கி பயனடைந்து வருவதாக தொழில் முனைவோர் ஒருவர் கூறுகிறார்.

( <<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ரொமேனியாவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஸா போஸ்லே - சீனாவின் **Zheng** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 6-0 என்ற செட் கணக்கில், குரேஷியாவின் **Mariana Drazic-** சீனாவின் **Shuo Feng** இணையை வென்றது.

-------------

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Smriti Bhasin** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில அவர், 6-2, 6-4 என்ற செட் கணக்கில் ஸ்வீடனின் **Jacqueline** -ஐ வென்றார்.

------------

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் **Reyes Varela** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-4, 6-4 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் அலெக்சாண்டர் - **Learner Tien** இணையை வென்றது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Krisha Mahendran** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-0 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Simone Kay-** ஐ வென்றார்.

-----------------

ஆசிய பாரா வில்வித்தை போட்டியில் இந்தியாவின் **Harvinder** இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியில், அவர், சீனாவின் **Zhao Lixue**-ஐ வென்றார்.

--------------

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 6 விக்கெட் இழப்பிற்கு 482 ரன் எடுத்துள்ளது.

**<<<<<>>>>>**